செய்தி வெளியீடு எண்:255 நாள்:26.05.2009

**<u>செய்தி வெளியீடு– 26.5.2009</u>**

# குறைந்த செலவில் தயாரிக்கப்படும் தரமான தமிழ்த் திரைப்படங்களுக்கு அரசு மானியம்! தகுதியான திரைப்படங்களைத் தேர்வு செய்ய நீதியரசர் பாஸ்கரன் தலைமையில் குழு!

## முதலமைச்சர் கலைஞர் ஆணை

**குறைந்த செலவில் தயாரிக்கப்படும் தரமான தமிழ்த் திரைப்படங்களுக்கு அரசு மானியம் வழங்கும் திட்டத்தின்கீழ் 2007ஆம் ஆண்டிலும், 2008 ஆம் ஆண்டிலும் குறைந்த செலவில் தயாரித்து வெளியிடப்பட்ட தமிழ்த் திரைப்படங்களில் அரசு மானியம் பெறுவதற்குத் தகுதியுடைய தரமான திரைப்படங்களை தேர்வு செய்வதற்காக நீதியரசர் பொன். பாஸ்கரன் அவர்களைத் தலைவராகவும், திரைப்பட நடிகர் திரு. வாகை சந்திரசேகர், இயக்குநர் திரு. எஸ். ஏ. சந்திரசேகர், நடிகை திருமதி சரோஜா தங்கவேலு, தமிழ் வளர்ச்சி, அறநிலையங்கள் மற்றும் செய்தித் துறைச் செயலாளர், வணிகவரி மற்றும் பதிவுத் துறைச் செயலாளர், வணிகவரித் துறை கூடுதல் ஆணையர், உள்(சினிமா) மதுவிலக்கு மற்றும் ஆயத் தீர்வைத் துறை, துணைச் செயலாளர், எம்.ஜி.ஆர். திரைப்படம் மற்றும் தொலைக்காட்சிப் பயிற்சி நிறுவனத்தின் முதல்வர் ஆகியோரை உறுப்பினர்களாகவும் கொண்ட குழு ஒன்றை அமைத்து முதலமைச்சர் கலைஞர் ஆணையிட்டுள்ளார்.**

*****

வெளியீடு:இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை.